# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டம்

---

(2003 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

2003, சனவரி மாதம் 10 ஆம் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

# 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டம்

[2003 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.— ஓ 61/2002
4717

**அரசாங்கத்தின் நிதிசார்ந்த செயல்நுட்பமானது பொறுப்புள்ள நிதிமுகாமைத்துவத்தின் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளதை உறுதிப்படுத்துவதற்கும்; நிதிசார்ந்த கொள்கையையும் செயற்பாட்டையும் பொதுமக்கள் நுண்ணாய்வுசெய்வதற்கு வசதியளிப்பதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமான தொரு சட்டம்**

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையின்மூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட திகதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்). — சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

2. அரசாங்கத்தின் நிதிசார்ந்த செயல்நுட்பம் இதனகத்துப் பின்னர் குறிப்பீடுசெய்யப்படும் பொறுப்புள்ள நிதி முகாமைத்துவத்தின் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். — அரசாங்க செயல்நுட்பம் பொறுப்புள்ள நிதி முகாமைத்துவத்தை அடிப்படையாகக் கொண்டிருத்தல்.

3. அரசாங்கத்தின் நிதிசார்ந்த செயல்நுட்பத்தை வகுப்பதில் அரசாங்கத்தால் அனுசரிக்கப்படவேண்டிய பொறுப்புள்ள நிதி முகாமைத்துவத்தின் மூலதாரக் குறிக்கோள்கள் பின்வருமாறாகும் :— — பொறுப்புள்ள நிதி முகாமைத்துவத்தின் மூலாதாரக் குறிக்கோள்கள்.

(அ) 2006 ஆம் ஆண்டின் இறுதியில் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை மதிப்பீடுசெய்யப்பட்ட மொத்த உள்ளூர் உற்பத்தியின் ஐந்து சதவீதத்தை விஞ்சாதிருப்பதையும் அதன்பின்னர் அத்தகைய மட்டங்கள் பேணப்படுவதையும் உறுதிசெய்வதன்மூலம் அரசாங்கத்தின் தனிசை விவேகமான மட்டத்திற்குக் குறைத்தல் ;

(ஆ) மாற்றமுறும் பொருளாதார சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு அரசாங்கத்தினால் எதிர்கொள்ளப்படும் நிதிசார்ந்த நட்டவச்சங்களை விவேகமாக முகாமை செய்தல் :

(இ) அரசாங்கத் தனிசை மிதமிஞ்சிய மட்டங்களுக்கு அதிகரிக்காத வகையில் செலவு தொடர்பில் கொள்கைகளைக் கடைப்பிடித்தல் :

(ஈ) வருங்காலத்தில் வரிவீதங்களின் மட்டத்தில் நியாயமான அளவு திரத்தன்மையுடனும் முன்மதிப்பிட்டுரைத்தலுடனும் ஒவ்வுகின்றவாறாக செலவு மற்றும் வரி தொடர்பிலான கொள்கைகளைக் கடைப்பிடித்தல் :

(உ) உத்தரவாதமாகக் கணக்கிடப்பட்டு முற்போந்த இரு நிதி ஆண்டுகளுடன் சேர்த்து நடப்பு நிதியாண்டுக்கான மொத்த உள்ளூர் உற்பத்தியின் நூற்றுவீதமாகக் கொடுக்கப்பட்ட பணத்தொகை. கூட்டுமொத்தத்தில் 4.5 சதவீதத்தை விஞ்சாதிருப்பதனை உறுதிப்படுத்துதல் :

(ஊ) 2006 சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்கும் நிதியாண்டின் முடிவில் அரசாங்கத்தின் மொத்தப் பொறுப்புகள் (நடப்பு செலாவணி வீதங்களில் வெளிநாட்டுத் தனிசு உட்பட) அந்நிதியாண்டிற்கு என மதிப்பீடுசெய்யப்பட்ட மொத்த உள்ளூர் உற்பத்தியின் எண்பத்தைந்து சதவீதத்தை விஞ்சமாட்டாது என்பதையும்; 2013 சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்கும் நிதியாண்டின் முடிவில் அரசாங்கத்தின் மொத்தப் பொறுப்புகள் (நடப்பு செலாவணி வீதங்களில் வெளிநாட்டுத் தனிசு உட்பட) அந்நிதியாண்டிற்கு என மதிப்பீடுசெய்யப்பட்ட மொத்த உள்ளூர் உற்பத்திகளின் அறுபது சதவீதத்தை விஞ்சமாட்டாது என்பதையும் உறுதிப்படுத்துதல் : அத்துடன்

(எ) அரசாங்கத்தின் கொள்கைசார்ந்த முடிவுகள் வருங்கால சந்ததிகள்மீது அத்தகைய முடிவின் நிதிசார்ந்த தாக்கத்தைக் கருத்திற் கொள்வதனை உறுதிப்படுத்துதல்.

நிதிசார்ந்த செயல்நுட்பக் கூற்று.

4. (1) அரசாங்கத்தின் நிதிசார்ந்த செயல்நுட்பமானது நிதிசார்ந்த செயல்நுட்பக் கூற்றொன்றில் (இதனகத்துப்பின்னர் "கூற்று" எனக் குறிப்பீடுசெய்யப்பட்டும்) தரப்படுதல் வேண்டும்.

(2) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் ஒவ்வோராண்டிலும் பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பிற்கென நிர்ணயிக்கப்பட்ட தினத்தன்று அரசாங்கத்தின் கூற்றைப் பொதுமக்களுக்கு விடுவிக்கச் செய்வித்தலும் அத்துடன் பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கச் செய்வித்தலும் வேண்டும்.

(3) அரசாங்கம் ஏதேனும் நேரத்தில் அமைச்சரால் குறிப்பிடப்படக்கூடிய காரணங்களுக்காக அதன் கூற்றை மீளாயலாம்.

(4) அரசாங்கம் அதன் கூற்றை மீளாயுமிடத்து, அமைச்சர் மீளாய்வு செய்யப்பட்ட கூற்றைப் பொதுமக்களுக்கு விடுவிக்கச் செய்வித்தலும் அத்துடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படச் செய்வித்தலும் வேண்டும் : அத்துடன் மீளாய்வு செய்யப்பட்ட கூற்று அது விடுவிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுதல் வேண்டும்.

(5) அமைச்சர் —

(அ) மீளாய்வு செய்யப்பட்ட கூற்று விடுவிக்கப்பட்ட தேதியன்று பாராளுமன்றம் அமர்வதாயின், அத்தகைய விடுவிப்பின் தேதியிலிருந்து இரண்டு வாரங்களுள் அத்தகைய கூற்றின் பிரதியொன்றை பாராளுமன்றத்திற் சமர்ப்பிக்கப்படச் செய்வித்தல் வேண்டும் : அல்லது

(ஆ) மீளாய்வு செய்யப்பட்ட கூற்று விடுவிக்கப்பட்ட தேதியன்று பாராளுமன்ற அமர்வு இல்லையெனில் பாராளுமன்றத்தின் அடுத்த அமர்விலிருந்து இரண்டு வாரங்களுக்குள் அத்தகைய கூற்றின் பிரதியொன்றைப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படச் செய்வித்தல் வேண்டும்.

கூற்றின் குறிக்கோள்கள்.

**5.** கூற்றொன்றின் குறிக்கோள்களாவன அரசாங்கத்தின் நிதிசார்ந்த கொள்கையைப் பற்றிய பொதுமக்களின் விழிப்புணர்வை அதிகரித்தலும் நிதிசார்ந்த செயல்நுட்பத்தை அரசாங்கம் கையாளும் விதத்தை மதிப்பீடுசெய்வதற்கான நியமங்களைத் தாபித்தலும் ஆகும்.

கூற்றின் உள்ளடக்கங்கள்.

**6.** கூற்றொன்று —

(அ) எந்த நடுத்தர தவணைக்குள் அரசாங்கத்தின் குறுகிய தவணைக்கான நிதிசார்ந்த குறிக்கோள்கள் தொகுத்தமைக்கப்படுமோ அந்த நடுத்தர தவணைக் கான அரசாங்கத்தின் நிதிசார்ந்த கொள்கையைக் குறித்துரைத்தல் வேண்டும் ;

(ஆ) வரவுசெலவுத்திட்டம் அதன் அடிப்படையாகக் கொண்டிருக்கின்ற அல்லது கொண்டிருக்கும் பரந்தளவிலான செயல்நுட்பம் சார்ந்த முன்னுரிமை களை விளக்கிக்கூறுதல் வேண்டும் ;

(இ) நடைமுறைப்படுத்தப்படவுள்ள செயல்நுட்பத்தினதும் மேலளாவிய நிதிசார்ந்த கொள்கையினதும் நோக்கில் முக்கியமானவை என அரசாங்கம் கருதும் பிரதான நிதி சார்ந்த நடவடிக்கைமுறைகளைக் குறித் துரைத்தல் வேண்டும் ;

(ஈ) நிதிசார்ந்த கொள்கைக்கு இணங்க அடுத்த நிதியாண்டு தொடர்பிலும் அடுத்துறும் மூன்று நிதியாண்டுகள் தொடர்பிலும் —

(i) செலவினம், வருமானம், தனிசு அத்துடன் வேறு நிதிசார்ந்த காட்டிகள் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் தொடர்பாக அரசாங்கத் தனிசுகள் எவையு மிருப்பின் அவற்றையும் பற்றிய விசேட குறிப்பீட்டுடன் அரசாங்கத்தின் நிதிசார்ந்த குறிக்கோள்களையும் இலக்குகளையும் ;

(ii) பந்தி (இ) என்பதில் குறித்துரைக்கப்பட்ட பிரதான வழிமுறைகளின் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றையும்,

குறித்துரைத்தல் வேண்டும்

(உ) பந்திகள் (அ), (ஆ), (ஈ) என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார்ந்த குறிக்கோள்களும் செயல்நுட்ப முன்னுரிமைகளும் எவ்வாறு பொறுப்புள்ள நிதி முகாமைத்துவத்தின் கோட்பாடுகளிற்கு ஒவ்வவிருக்கின்றன என்பதனை விளக்கிக் கூறுதல் வேண்டும் ;

(ஊ) அத்தகைய குறிக்கோள்களும் முன்னுரிமைகளும் பொறுப்புள்ள நிதி முகாமைத்துவக் கோட்பாடுகளிலிருந்து பொருளளவில் விலகியிருப்பின் —

(i) விலகியிருப்பதற்கான காரணங்களையும் ;

(ii) அக்கோட்பாடுகளுக்குத் திரும்பிச் செல்வதற்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளையும் ; அத்துடன்

(iii) எந்தக் காலப்பகுதிக்குள் அரசாங்கம் கோட்பாடுகளுக்குத் திரும்பிச் செல்லுமோ அக்காலப்பகுதியையும்,

விளக்கிக் கூறுதல் வேண்டும் ;

(எ) கூற்று, உடன்முன்னரான கூற்றிலிருந்து விலகியிருக்குமிடத்து விலகலை நியாயப்படுத்தும் காரணங்களைக் கொடுத்தல் வேண்டும்.

**வரவுசெலவுத் திட்டப் பொருளாதார, மற்றும் நிதி நிலைப்பாட்டு அறிக்கை.**

7. அமைச்சர் ஒவ்வோராண்டிலும் ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் இரண்டாவது வாசிப்புக்கு நிர்ணயிக்கப்பட்ட தினத்தன்று வரவுசெலவுத்திட்டப் பொருளாதார, நிதி நிலைப்பாட்டு அறிக்கையொன்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கச் செய்வித்தல் வேண்டும்.

**வரவுசெலவுத் திட்டப் பொருளாதார, நிதி நிலைப்பாட்டு அறிக்கைகளின் குறிக்கோள்கள்.**

8. வரவுசெலவுத்திட்டப் பொருளாதார, நிதி நிலைப்பாட்டு அறிக்கையை கிடைக்கச் செய்வதன் நோக்கங்கள் அரசாங்கக் கூற்றில் தரப்பட்டுள்ளவாறு அதன் நிதிசார்ந்த செயல்நுட்பத்தை எதிர் நிறுத்தி அரசாங்கத்தின் நிதிச் செயற்பாட்டின் மதிப்பீட்டிற்கு ஓர் அடிப்படையாக அமையும் தகவலை வழங்குவதாகும்.

வரவுசெலவுத் திட்டப் பொருளாதார, நிதிநிலைப்பாட்டு அறிக்கையில் உள்ளடக்கங்கள்.

**9.** (1) வரவுசெலவுத் திட்டப் பொருளாதார, நிதி நிலைப்பாட்டு அறிக்கையானது, அடுத்த நிதியாண்டு தொடர்பிலும், அடுத்துவரும் இரண்டு நிதியாண்டுகள் தொடர்பிலும் பின்வரும் தகவலை உள்ளடக்குதல் வேண்டும் :—

(அ) மொத்த உள்ளூர் உற்பத்திகள் தொடர்பான மதிப்பீடுகள் ;

(ஆ) பாவனையாளர் விலைகள் தொடர்பிலான மதிப்பீடுகள் ;

(இ) தொழில் மற்றும் தொழிலில்லாமை தொடர்பிலான மதிப்படுகள் ;

(ஈ) கொடுப்பனவுச்சமச்சீரின் நடைமுறைக் கணக்கு தொடர்பிலான மதிப்பீடுகள் ;

(உ) வருமான செலவினம் தொடர்பிலான மதிப்பீடுகள் ;

(ஊ) அரசாங்கக் கடனெடுத்தல்கள் தொடர்பிலான மதிப்பீடுகள் ;

(எ) பந்தி (அ) முதல் (ஊ) வரையிலான பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட மதிப்பீடுகளின் தயாரிப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள பொருளாதார அல்லது வேறு வகையான அடிப்படைகள் ;

(ஏ) அத்தகைய மதிப்பீடுகளின் தயாரிப்பில் பயன்படுத்தப்பட்ட பொருளாதார அல்லது வேறு அடிப்படைகள் தொடர்பில் ஏற்படக்கூடிய மாற்றங்களுக்கு, மேலே குறித்துரைக்கப்பட்ட மதிப்பீடுகளின் உயிர்ப்புநிலை தொடர்பான கூற்றொன்று ;

(ஐ) நிதி நிலைப்பாட்டின்மீது முக்கியமான தாக்கத்தைக் கொண்டிருக்கக்கூடிய,

(i) எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட உத்தரவாதங்கள், நட்டோத்திரவாதங்கள் உட்பட எதிர்பாரா பொறுப்புகள் ;

(ii) பந்தி (உ) என்பதில் குறிப்பீடுசெய்யப்பட்ட மதிப்பீடுகளில் உள்ளடக்கப்படாத அரசாங்க செலவுகள் தொடர்பிலான அரசாங்க பிரேரணைகள் தொடர்பான பகிரங்க அறிவித்தல்கள் ;

(iii) இறுதியாக முடிவுசெய்யப்படாத அரசாங்கத்தின் நடைபெற்றுவரும் பேரப்பேச்சு வார்த்தைகள்.

(ஊ) மூன்று, சாத்தியப்படக்கூடியளவு கணியப்படுத்தப்பட்ட நட்டவச்சக் கூற்றொன்று ;

(ஒ) அத்தகைய ஒவ்வொரு நிதியாண்டு தொடர்பிலும் அரசாங்கத்தின் நிதி நிலைமையை நியாயமாக பிரதிபலிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு தகவல்.

(2) உட்பிரிவு (1) இன் ஏற்பாடுகளுக்கமைய வரவு செலவுத்திட்டப் பொருளாதார, நிதி நிலைப்பாட்டு அறிக்கையில் அடங்கியுள்ள தகவல் சாத்தியப்படக்கூடிய அளவுக்கு எல்லா அரசாங்க முடிவுகளையும் அரசாங்கத்தின் நிதி மற்றும் பொருளாதார நிலைப்பாட்டில் முக்கியமான தாக்கம் ஒன்றைக் கொண்டிருக்கக்கூடிய வேறு எல்லாச் சூழ்நிலைகளையும் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

(3) இப்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், அமைச்சரின் கருத்திலான அபிப்பிராயப்படி —

(அ) தேசிய பாதுகாப்பிற்குப் பங்கம் ஏற்படுத்தக்கூடிய ;

(ஆ) இணக்கப் பேரப்பேச்சுவார்த்தையில், வழக்காடலில் அல்லது வர்த்தக செயற்பாட்டின் முக்கியமான விதத்தில் இலங்கையை இக்கட்டிலிடும்

ஏதேனும் தகவல் வெளிப்படுத்துகையொன்றை வரவு செலவுத்திட்டப் பொருளாதார, நிதி நிலைப்பாட்டு அறிக்கையில் உட்படுத்துமாறு தேவைப்படுத்துவதாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

நடு ஆண்டு நிதி நிலைப்பாட்டு அறிக்கை.

**10.** (1) அமைச்சர் ஒவ்வோராண்டு தொடர்பிலும் இயைபான ஆண்டின் யூன் மாதத்தின் கடைசி தினம், அல்லது ஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதக் கழிவு என்பவற்றுள் எது பிந்தியதோ அப்போது நடு ஆண்டு நிதி நிலைப்பாட்டு அறிக்கையொன்றை பொதுமக்களுக்கு விடுவிக்க செய்வித்தல் வேண்டும்.

(2) அமைச்சர் —

(அ) பாராளுமன்றம் நடு ஆண்டு நிதி நிலைப்பாட்டு அறிக்கை விடுவிக்கப்பட்ட தேதியன்று அமர்வ தாயின், அத்தகைய விடுவிப்பின் தேதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் அத்தகைய அறிக்கையின் பிரதியொன்றைப் பாராளுமன்றத்திற் சமர்ப்பிக்கச் செய்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) பாராளுமன்றம் நடு ஆண்டு நிதி நிலைப்பாட்டு அறிக்கை விடுவிக்கப்பட்ட தேதியன்று அமரவில்லை யாயின் பாராளுமன்றத்தின் அடுத்த அமர்விலிருந்து இரண்டு வாரங்களுக்குள் அத்தகைய அறிக்கையின் பிரதியொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கச் செய்வித்தல் வேண்டும்.

நடு ஆண்டு நிதி நிலைப்பாட்டு அறிக்கையின் குறிக்கோள்கள்.

**11.** நடு ஆண்டு நிதி நிலைப்பாட்டு அறிக்கையின் குறிக்கோள்களாவன, அரசாங்கத்தின் நிதிச் செயற்பாடு பற்றிய நாளது வரையிலான தகவலை வழங்குதலும் அதன்மூலம் நடப்புக்கூற்றில் தரப்பட்டுள்ள நிதி சார்ந்த செயல்நுட்பத்தை எதிர்நிறுத்தி அரசாங்கத்தின் நிதிச் செயற்பாட்டை மதிப்பீடு செய்வதனைப் பொதுமக்களுக்கு இயலச் செய்வதுமாகும்.

நடு ஆண்டு நிதி நிலைப்பாட்டு அறிக்கையின் உள்ளடக்கங்கள்.

**12.** (1) நிதியாண்டொன்று தொடர்பிலான நடு ஆண்டு நிதி நிலைப்பாட்டு அறிக்கையானது —

(அ) அவ்வாண்டின் முதல் நான்கு மாதங்களுக்கு மதிப்பீடுசெய்யப்பட்டதும் உள்ளவாறானதுமான செலவினத்தின் கூற்றொன்றையும் ;

(ஆ) அவ்வாண்டின் முதல் நான்கு மாதங்களுக்கு மதிப்பீடுசெய்யப்பட்டதும் உள்ளவாறானதுமான வருமானத்தின் கூற்றொன்றையும் ;

(இ) அவ்வாண்டின் முதல் நான்கு மாதங்களுக்கு மதிப்பீடுசெய்யப்பட்டதும் உள்ளவாறானதுமான பணவோட்டங்கள் பற்றிய கூற்றொன்றையும் ;

(ஈ) அவ்வாண்டின் முதல் நான்கு மாதங்களுக்கு மதிப்பீடுசெய்யப்பட்டதும் உள்ளவாறானதுமான கடனெடுத்தல்களின் கூற்றொன்றையும் ;

(உ) அத்தகைய நிதியாண்டின் முதல் நான்கு மாதங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் நிதி நிலைப்பாட்டை நியாயமாகப் பிரதிபலிப்பதற்கு அவசியமாகக்கூடிய வாறான அத்தகைய வேறு கூற்றுக்களையும்,

உள்ளடக்குதல் வேண்டும்.

(2) மதிப்பிடப்பட்ட வருமானத்தில் அல்லது பணவோட்டத்தில் துண்டுவிழுதலொன்று இருக்குமிடத்து அல்லது மதிப்பிடப்பட்ட செலவினத்தில் அல்லது கடன்பெறுகையில் விஞ்சுதலொன்று இருக்குமிடத்து, அறிக்கையானது, அத்தகைய துண்டுவிழுதலுக்கான காரணங்களைக் கூறுதல் வேண்டும்.

(3) நான்காம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, நடு ஆண்டு நிதி நிலைப்பாட்டு அறிக்கையில் அடங்கியுள்ள தகவல், இயன்றளவு வரை, (அவ்வாண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், எடுக்கப்படும் முடிபுகளும் எழுதியுள்ள சூழ்நிலைகளும் உட்பட) நிதி நிலைப்பாட்டின்மீது முக்கியமானவொரு தாக்கத்தைக் கொண்டிருக்கக்கூடிய எல்லா அரசாங்க முடிவுகளையும் வேறெல்லாச் சூழ்நிலைகளையும் கணக்கிற்கெடுத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவில் அடங்கியுள்ளதெதுவும், நடு ஆண்டு நிதி நிலைப்பாட்டு அறிக்கையில், அமைச்சரின் எழுத்திலான அபிப்பிராயத்தில் —

(அ) தேசிய பாதுகாப்புக்குப் பங்கம் விளைவிக்கும் ;

(ஆ) பேரப் பேச்சுவார்த்தை, வழக்காடுதல் அல்லது வர்த்தகச் செயற்பாட்டில், முக்கியமானவொரு வழியில் இலங்கையை இக்கட்டிலிடும்,

ஏதேனும் தகவலை வெளியிடுதலை உள்ளடக்குவதனைத் தேவைப்படுத்துகின்றதாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

(5) நடு ஆண்டு நிதி நிலைப்பாட்டு அறிக்கையொன்றில் உள்ளடக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் கருமத்தின் மீதான ஏதேனும் தகவல், கடைசி வரவு செலவுத் திட்டப் பொருளாதார, நிதி நிலைப்பாட்டு அறிக்கையில் உட்படுத்தப்படுகின்றவாறான அத்தகைய கருமம் தொடர்பான தகவலிலிருந்து மாறாததாக உள்ளவிடத்து, நடு ஆண்டு நிதி நிலைப்பாட்டு அறிக்கையானது, அத்தகைய தகவல் அவ்வாறு மாற்றமடையவில்லையெனக் கூறுதல் வேண்டும்.

இறுதிவரவு செலவுத் திட்ட நிலைப்பாட்டு அறிக்கை.

**13.** (1) அமைச்சரானவர், ஒவ்வொரு நிதியாண்டு தொடர்பிலும், அந்த நிதியாண்டு முடிவடைவதிலிருந்து ஐந்து மாதங்களுக்குப் பிந்தாமல், இறுதி வரவுசெலவுத் திட்ட நிலைப்பாட்டு அறிக்கையொன்றைப் பொதுமக்களுக்கு வெளியிடச்செய்தல் வேண்டும்.

(2) அமைச்சரானவர் —

(அ) இறுதி வரவுசெலவுத்திட்ட நிலைப்பாட்டு அறிக்கை வெளியிடப்பட்ட தேதியன்று பாராளுமன்றம் அமர்கின்றதாயின், அத்தகைய வெளியீட்டுத் தேதியிலிருந்து இருவாரங்களினுள் அத்தகைய அறிக்கையின் பிரதியொன்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) இறுதி வரவுசெலவுத் திட்ட நிலைப்பாட்டு அறிக்கை வெளியிடப்படும் தேதியன்று பாராளுமன்றம் அமராதிருப்பின், பாராளுமன்றத்தின் அடுத்த அமர்விலிருந்து இருவாரங்களினுள் அத்தகைய அறிக்கையின் பிரதியொன்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) ஒரு நிதியாண்டுக்கான இறுதி வரவுசெலவுத் திட்ட நிலைப்பாட்டு அறிக்கை, அந்த நிதியாண்டு தொடங்கியபின்னர் அறிமுகப்படுத்தப்படுகின்ற ஒரு நிதியாண்டு தொடர்பிலான வரவுசெலவுத்திட்டப் பொருளாதார, நிதி நிலைப்பாட்டு அறிக்கையுடன் சேர்க்கப்படலாம்.

**14.** இறுதி வரவுசெலவுத் திட்ட நிலைப்பாட்டு அறிக்கையின் குறிக்கோள், அரசாங்கத்தின் நிதிச் செயல்நிறைவேற்றத்தினது முழுமையாக்கப்பட்ட தகவலை வழங்குதலும் அதன் மூலம் அரசாங்கத்தின் நடப்புக் கூற்றில் தரப்பட்டுள்ள நிதிச் சார்ந்த செயல்நுட்பத்தை எதிர்நிறுத்தி அதன் நிதிச் செயற்பாட்டைப் பொதுமக்கள் மதிப்பீடு செய்வதனை இயலச் செய்தலும் ஆகும். இறுதி வரவு செலவுத் திட்ட நிலைப்பாட்டு அறிக்கையின் குறிக்கோள்கள்.

**15.** (1) ஒரு நிதியாண்டு தொடர்பில் இறுதி வரவு செலவுத் திட்ட நிலைப்பாட்டு அறிக்கையானது — இறுதி வரவு செலவுத் திட்ட நிலைப்பாட்டு அறிக்கையின் உள்ளடக்கங்கள்.

(அ) அவ்வாண்டுக்கான மதிப்பிடப்பட்டதும் உள்ளபடியானதுமான செலவினம்பற்றிய கூற்றொன்றையும்,

(ஆ) அவ்வாண்டுக்கான மதிப்பிடப்பட்டதும் உள்ளபடியானதுமான வருமானம் பற்றிய கூற்றொன்றையும் ;

(இ) அவ்வாண்டுக்கான மதிப்பிடப்பட்டனவும் உள்ளபடியானவையுமான பணவோட்டங்கள் பற்றிய ஒரு கூற்றொன்றையும் ; அத்துடன்

(ஈ) அவ்வாண்டுக்கான மதிப்பிடப்பட்டதும் உள்ளபடியானதுமான கடனெடுத்தல் பற்றிய கூற்றொன்றையும் ; அத்துடன்

(உ) அத்தகைய நிதியாண்டின் முடிவில் அரசாங்கத்தின் நிதி நிலைமையை நியாயமாகப் பிரதிபலிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு கூற்றுக்களையும்,

உள்ளடக்குதல் வேண்டும்.

(2) மதிப்பிடப்பட்ட வருமானம் அல்லது பணவோட்டத்தில் துண்டுவிழுதலொன்று இருக்குமிடத்து அல்லது மதிப்பிடப்பட்ட செலவினத்தில் அல்லது கடன்பெறுகையில் விஞ்சுதலொன்று இருக்குமிடத்து, அத்தகைய துண்டுவிழுதலுக்கான அல்லது விஞ்சுதலுக்கான காரணங்களை அறிக்கையானது கூறுதல் வேண்டும்.

தேர்தலுக்கு முன்னரான வரவுசெலவுத் திட்ட நிலைப்பாட்டு அறிக்கை.

**16.** (1) அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பொதுத் தேர்தலை நடாத்துமாறு தேவைப்படுத்துகின்ற பிரகடனம் அல்லது கட்டளை ஒன்று வெளியிடப்பட்டதிலிருந்து மூன்று வாரங்களினுள், நாட்டின் நிதிநிலைமை பற்றிய தகவலைக் கொண்டுள்ள தேர்தலுக்கு முன்னரான வரவுசெலவுத் திட்ட நிலைப்பாட்டு அறிக்கையொன்றைப் பொதுமக்களுக்கு விடுவிக்கச் செய்தல் வேண்டும்.

(2) அமைச்சரானவர், புதிய பாராளுமன்றத்தின் முதலாவது அமர்விலிருந்து இருவாரங்களினுள், (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட அறிக்கையின் பிரதியொன்றைப் பாராளுமன்றத்தின் முன்னர் இடுவித்தல் வேண்டும்.

தேர்தலுக்கு முன்னரான வரவுசெலவுத் திட்ட நிலைப்பாட்டு அறிக்கையின் உள்ளடக்கங்கள்.

**17.** (1) ஒவ்வொரு தேர்தலுக்கு முன்னரான வரவுசெலவுத் திட்ட நிலைப்பாட்டு அறிக்கையும், நடப்பு நிதியாண்டுக்கான பின்வரும் தகவலைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) வருமான, செலவின மதிப்பீடுகள் ;

(ஆ) அரசாங்கக் கடனெடுத்தல்களின் மதிப்பீடுகள் ;

(இ) அம்மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்பட்டுள்ள பொருளாதார மற்றும் வேறு ஊகங்கள் ;

(ஈ) நிதி நிலைப்பாட்டின்மீது முக்கியமான தாக்கத்தைக் கொண்டிருக்கக்கூடிய,

(i) ஏதேனும் சட்டத்தின்கீழ் அரசாங்கத்தினால் அளிக்கப்படும் உத்தரவாரங்களும் நட்டோத்தரவாதங்களும் உட்பட, எதிர்பாராப் பொறுப்புக்கள் ;

(ii) பந்தி (அ) விற் குறிப்பீடு செய்யப்பட்ட மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டிராத, அரசாங்கத்தினால் செலவிடப்படுவதற்காகப் பகிரங்கமாக அறிவிக்கப்பட்ட உத்தேசங்கள் ; அத்துடன்

(iii) நடைபெற்றுக் கொண்டிருப்பவையும் இறுதியாக்கப்படாதவையுமான அரசாங்கப் பேரப் பேச்சு வார்த்தைகள்.

(ஊ) ஏற்ற சாத்தியப்படக்கூடியளவு கணியப்படுத்தப்பட்ட நட்டவச்சக் கூற்றொன்று :

(எ) சொல்லப்பட்ட அறிக்கையைத் தேதியிலுள்ளவாறாக அரசாங்கத்தின் நிதி நிலைமையை நியாயமாகப் பிரதிபலிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு தகவல்.

(2) தேர்தலுக்கு முன்னரான வரவுசெலவுத் திட்ட நிலைப்பாட்டு அறிக்கையிலான தகவல், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, நிதி நிலைமைப்பாட்டின்மீது முக்கியமானவொரு தாக்கத்தைக் கொண்டுள்ள அரசாங்கத்தின் ஏதேனும் முடிவை இயன்றதாகவுள்ள உச்ச அளவு வரை கணக்கிற்கெடுத்தல் வேண்டும்.

(3) இப்பிரிவிலுள்ளதெதுவும், எந்தத் தகவலை வெளிவிடுதலானது, எழுத்தில் கொடுக்கப்படும் அமைச்சரின் அபிப்பிராயத்தில் —

(அ) தேசியப் பாதுகாப்புக்கு பங்கம் விளைவிக்கும் ;

(ஆ) பேரப்பேச்சுவார்த்தையில், வழக்காடுதலில் அல்லது வர்த்தகச் செயற்பாட்டில் முக்கியமானவொரு வழியில் இலங்கையை இக்கட்டிலிடும்

தகவல் எதனையும் தேர்தலுக்கு முன்னரான வரவுசெலவுத்திட்ட நிலைப்பாட்டு அறிக்கையில் சேர்ப்பதற்குத் தேவைப்படுத்துவதாக வாசிக்கப்படுதல் அல்லது பொருள் கொள்ளப்படுதல் ஆகாது.

(4) தேர்தலுக்கு முன்னரான வரவுசெலவுத்திட்ட நிலைப்பாட்டு அறிக்கையொன்றில் சேர்க்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்தின்மீதான தகவல், முன்னைய வரவு செலவுத்திட்டப் பொருளாதார, நிதி நிலைப்பாட்டு அறிக்கையொன்றில் அல்லது நடு ஆண்டு வரவுசெலவுத்திட்ட நிதி நிலைப்பாட்டு அறிக்கையொன்றில் சேர்க்கப்பட்ட

அக்கருமத்தின்மீதான தகவலிலிருந்து மாறாததாக உள்ள விடத்து, தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத்திட்ட நிதி நிலைப்பாட்டு அறிக்கையானது, இந்த முன்னைய அறிக்கையினுள் ஏதேனுமொன்றில் அல்லது இரண்டிலும் சேர்க்கப்பட்ட தகவலிலிருந்து அத்தகைய தகவல் மாற்றமடையவில்லையெனக் கூறுதல் வேண்டும்.

தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத்திட்ட நிலைப்பாட்டு அறிக்கையைத் தயாரிப்பதற்காக அமைச்சர் தகவலை வழங்குதல்.

**18.** அமைச்சரானவர், 16 ஆம் பிரிவின்கீழ் தேர்தலுக்கு முன்னரான வரவுசெலவுத் திட்ட நிலைப்பாட்டு அறிக்கையொன்றைச் செயலாளர் தயாரிப்பதனை இயலச்செய்யும் நோக்கத்துக்காக, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பொதுத் தேர்தலொன்றை நடாத்தும்படி தேவைப்படுத்துகின்ற பிரகடனம் அல்லது கட்டளை வெளியிடப்பட்டதிலிருந்து ஒரு வாரத்தினுள் —

(அ) அமைச்சரின் அறிவுக்குட்பட்டவையும் ; அத்துடன்

(ஆ) முக்கியமான நிதி அல்லது பொருளாதாரச் சிக்கல்களைக் கொண்டுள்ளவையும் அல்லது கொண்டிருக்கக் கூடியவையும்,

ஆன எல்லா அரசாங்க முடிபுகளையும் வேறு சூழ்நிலைகளையும் செயலாளருக்கு வெளிவிடுதல் வேண்டும்.

பொறுப்புடைமை பற்றிய கூற்றுக்கள்

**19.** ஒவ்வொரு தேர்தலுக்கு முன்னரான வரவுசெலவுத்திட்ட நிலைப்பாட்டு அறிக்கையும் பின்வருவனவற்றுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும் —

(அ) அமைச்சரானவர் 18 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகியுள்ளாரென அமைச்சரினால் கையொப்பமிடப்படும் ஒரு கூற்று ;

(ஆ) அறிக்கையிலுள்ள தகவல், இயன்றதாகவுள்ள உச்ச அளவுவரை —

(i) அமைச்சரின் அமைச்சு அலுவலர்களின் மிகச் சிறந்த உயர்தொழில்சார் நுண்ணறிவாற்றலைப் பிரதிபலிக்கின்றது ;

(ii) அமைச்சுக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள எல்லாப் பொருளாதார மற்றும் நிதித் தகவலைக் கணக்கிற்கு எடுக்கின்றது ;

(iii) 18 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரினால் அவருக்கு வெளிவிடப்பட்ட அரசாங்க முடிபுகளினதும் சூழ்நிலைகளினதும் நிதிச் சிக்கல்களைச் சேர்க்கின்றது.

என்ற பொருள்பட செயலாளரினால் அளிக்கப்படும் ஒரு கூற்று.

மத்திய வங்கியிடமிருந்து கடனெடுத்தல் மீதான மட்டுப்பாடுகள்.

**20.** (1) இரண்டாம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, அரசாங்கம் மத்திய வங்கியிலிருந்து கடன்பெறுதலாகாது.

(2) அரசாங்கமானது, ஒரு நிதியாண்டில் பணப்பெறுகைகளிலும் பார்க்க பணச்செலவழிப்புகளின் தற்காலிக விஞ்சுதலை ஈடுசெய்வதற்கு, முற்பணங்கள் என்ற வகையாக, மத்திய வங்கியிலிருந்து கடன்பெறலாம் :

ஆயின், அத்தகைய ஒவ்வொரு முற்பணமும், அத்தகைய முற்பணத் தேதியிலிருந்து ஆறுமாதங்களினுள் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், ஒரு நிதியாண்டில் எந்நேரத்திலும் நிலுவையாகவுள்ள அத்தகைய முற்பணங்களின் மொத்தம், அந்த நிதியாண்டுக்காக அரசாங்கத்தின் மதிப்பிடப்பட்ட வருமானங்களின் பத்து சதவீதத்தை விஞ்சுதலாகாது.

(3) இப்பிரிவில் அடங்கியுள்ளதெதுவும், அரசாங்கத் திறைசேரி உண்டியல்களின் தொடக்க வழங்குகைகளுக்கு ஒப்பப்பணம் செலுத்துவதிலிருந்து மத்திய வங்கியைத் தடைசெய்வதாகக் கருதப்படுதலாகாது.

அறிக்கைகளும் கூற்றுக்களும் கணக்கீட்டு நியமங்களுக்கு இசைந்தொழுகுதல்

**21.** இச்சட்டத்திற் குறிப்பீடு செய்யப்படும் எல்லாக் கூற்றுக்களும் அறிக்கைகளும் பொதுத்துறைக் கணக்குகள் தொடர்பாக மிகச் சிறந்த வழக்கக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்கத் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

தகவலைப் பெறுவதற்குச் செயலாளருக்குள்ள உரித்துவம்.

**22.** (1) நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், அரசாங்கம் எந்த அமைச்சில், திணைக்களத்தில், பகிரங்கக் கூட்டுத்தாபனத்தில் அல்லது கம்பெனியில் பங்குகளை வைத்திருக்கின்றதோ அந்த அமைச்சுக்கு, திணைக்களத்திற்கு, பகிரங்கக் கூட்டுத் தாபனத்துக்கு அல்லது கம்பெனிகளுக்கு, 4 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட கூற்றையும் 7, 10, 13 மற்றும் 16 ஆகிய பிரிவுகளிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிக்கைகளையும் தயாரிப் பதற்கு அவசியமானவாறான அத்தகைய தகவலை அவருக்குக் கொடுத்துதவும்படி எழுத்தில் வேண்டுகோள் விடுக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி எந்த அமைச்சுக்கு, திணைக்களத்துக்கு, பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு அல்லது கம்பனிக்கு வேண்டுகோளொன்று விடுக்கப்படுகின்றதோ அந்த அமைச்சு, திணைக்களம், பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது கம்பனி, விடயத்துக்கேற்ப, கூற்றை அல்லது அறிக்கையைத் தயாரிப்பதில் வேண்டப்படும் தகவலைக் கணக்கிற்கெடுப்பதற்குச் செயலாளரை இயலச்செய்யும் அத்தகைய வேண்டுகோளுக்கு உடனும் இணங்கி யொழுகுதல் வேண்டும்.

பாராளுமன்றத்தில் நிலையியற் குழுக்களினால் அறிக்கை களுக்கான குறிப்பீடு.

**23.** நான்காம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட கூற்றும் 7, 10, 13, மற்றும் 16 ஆகிய பிரிவுகளிற் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கைகளும் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுவதன் மேல், அத்தகைய கூற்று அல்லது அறிக்கை பாராளுமன்றத்தின் இயைபான நிலையியற் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

அறிக்கைகளை வெளியிடுதலும் விற்பனை செய்தலும்.

**24.** நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச் சரின் அமைச்சுச் செயலாளர், கசெற்றில் வெளியிடப்படும் அறிவிப்பின் மூலம் —

(அ) 4 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட கூற்றினதும் 7, 10, 13 மற்றும் 16 ஆகிய பிரிவுகளின் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கைளினதும் பிரதிகள் கட்டண மின்றிப் பரிசோதனைக்குக் கிடைக்கக்கூடியன வாக்கப்படுகின்ற இடத்தைக் குறித்துரைக்கலாம் : அத்துடன்

(ஆ) கூற்றினதும் அறிக்கைகளினதும் பிரதிகள் விற் பனைக்குக் கிடைக்கக்கூடியனவாகவுள்ள இடத்தைக் குறித்துரைக்கலாம்.

வழக்கு நடவடிக்கைக்கான பாதுகாப்பு.

25. இச்சட்டத்தின்கீழ் பகிரங்க அலுவலரொருவரினால் நம்பிக்கையுடன் செய்யப்படும் அல்லது செய்யாதுவிடப்படும் எதற்கும் அத்தகைய பகிரங்க அலுவலருக்கெதிராகக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கை எதுவும் தொடுக்கப்படலாகாது.

இச்சட்டத்தின் ஏற்பாடுகளிலிருந்து விலகுதல்.

26. (1) அரசாங்கமானது, விதிவிலக்கான சூழ்நிலைகளில், பாராளுமன்றத் தீர்மானம் என்ற வகையாக அளிக்கப்பட்ட பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடனும் அத்தகைய தீர்மானத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கும், இச்சட்டத்தின் தேவைப்பாடுகளிலிருந்து விலகலாம்.

(2) அமைச்சரானவர், இச்சட்டத்தின் தேவைப்பாடுகளிலிருந்து விலகுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் —

(அ) அத்தகைய விலகுதலுக்கான காரணங்கள் ;

(ஆ) அத்தகைய விலகுதலை அவசியமாக்கும் காரணிகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் ;

(இ) தேவைப்பாடுகளிலிருந்து அவ்வாறு விலகியமை எக்காலப்பகுதியினுள் முடிவுறுவேண்டுமென அரசாங்கம் எதிர்பார்க்கின்றதோ அக்காலப்பகுதி,

என்பனவற்றைப் பாராளுமன்றத்துக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(3) விலகுகையொன்று செய்யப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அமைச்சரானவர் —

(அ) அத்தகைய விலகுதல் அவசியமாக்கப்படுகின்ற தேதியன்று பாராளுமன்றம் அமர்ந்திருப்பின், அத்தகைய விலகுதல் தொடர்பாக (2) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்படும் கருமங்கள் பற்றி விலகுதற் தேதியிலிருந்து இருவாரங்களினுள் பாராளுமன்றத்துக்குத் தெரிவித்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) அத்தகைய விலகுதற் தேதியன்று பாராளுமன்றம் அமராதிருப்பின், அத்தகைய விலகுதல் தொடர்பாக (2) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்படும் கருமங்கள் பற்றிப் பாராளுமன்றத்தின் அடுத்த அமர்விலிருந்து இரு வாரங்களினுள் பாராளுமன்றத்துக்குத் தெரிவிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

27. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.